வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 02.12.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 336 பக்கங்கள் : 08

## இலங்கைக்கு எப்போதும் இந்தியா துணை நிற்கும்

### அனுரவிடம் உறுதியளித்தார் மோடி

**Narendra Modi** @narendramodi X.com

**Spoke with President Dissanayake and conveyed heartfelt condolences on the tragic loss of lives and the widespread devastation caused by Cyclone Ditwah. As a close and trusted friend, India stands firmly beside Sri Lanka and its people in this difficult hour.**

கொழும்பு, டிசெம்பர் 02

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுடன் நேற்று தொலைபேசியில் பேசிய இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு இந்தியா துணை நிற்கும் என உறுதியளித்துள்ளார்.

இந்த உரையாடல் குறித்து மோடி தனது கூறியிருப்பதாவது:-

"சூறாவளியால் ஏற்பட்ட துயரகரமான உயிர் இழப்பு மற்றும் பரவலான பேரழிவு குறித்து ஜனாதிபதி திஸநாயக்கவுடன் 07

## "பதற்றம் வேண்டாம்"

யாழ்ப்பாணம், டிசெ. 02

டித்வா புயலின் அமுக்க நிறைவுச் செயற்பாட்டின் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. குறிப்பாக வட மாகாணத்தின் மேற்கு பகுதிகள் குறிப்பாக மன்னார் தீவு, மாந்தை மேற்கின் சில பகுதிகள், நானாட்டானின் சில பகுதிகள், கிளிநொச்சியின் மேற்கு பகுதிகள் கனமழையைப் பெறும் வாய்ப்புள்ளது. ஆனாலும் நேற்று மாலைக்கு 07

## இலங்கைக்கு பிரிட்டன் அவசர உதவி

கொழும்பு, டிசெ. 02

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு, அவசர உதவி மற்றும் உயிர்காக்கும் ஆதரவை வழங்குவதற்காக, பிரித்தானியா 8 இலட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அவசர மனிதாபிமான உதவியாக வழங்கவுள்ளதாக பிரித்தானிய தூதரகம் நேற்று அறிவித்தது.

சூறாவளியின் பேரழிவிலிருந்து 07

## வட்டுவாகல் பாலம் உடைந்தது!



முல்லைத்தீவு, டிசெ. 02

தற்போது ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக வட்டுவாகல் பாலம் உடைந்துள்ளது. இதனால் புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவுக்கான பிரதான வீதியின் போக்குவரத்து வட்டுவாகல் பாலத்தினால் தடைப்பட்டுள்ளது.

வட்டுவாகல் பாலத்தின் நேற்றைய நிலைமைகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தார். இதன்போது முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஆகியோரும், ஏனைய 07

## வெள்ளம் குறையும் நேரத்தில் நோய்கள் குறித்து அவதானம்

கொழும்பு, டிசெ. 02

வெள்ளம் குறையும் நிலைமையில் தொற்று நோய்கள் மற்றும் நோய்க்கிருமிகளால் நோய்கள் பரவுவதற்கான அதிக ஆபத்து குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 50 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ 07

## எலிக் காய்ச்சலினால் யாழில் 2 பேர் மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் எலிக்காய்ச்சலினால் இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும் வெள்ளநீருடன் தொடுகையுறுபவர்கள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் 07

## மூளையில் கிருமி தொற்று இளம் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 02

மூளையில் ஏற்பட்ட கிருமித்தொற்று காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். கிளிநொச்சியை சேர்ந்த 31 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

இவருக்கு கடந்த 22ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது. இந்நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். 07

## கலா ஓயா வெள்ளத்தில் மூழ்கிய பஸ்ஸில் காணாமற்போன இளைஞர் சடலமாக மீட்பு

வவுனியா, டிசெ. 02

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் கலா ஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கிய போது பஸ்ஸில் இருந்து காணாமற்போன இளைஞர் நேற்று சடலமாக



மீட்கப்பட்டார்.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் அநுராதபுரம் - புத்தளம் வீதியில் கலா ஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கியது.

இதன்போது பஸ்ஸில் சுமார் 07

## சேதமுற்ற நாட்டை மீளக் கட்டியெழுப்ப நீண்டகால வலுவான நிதியம் அவசியம்

### ஜனாதிபதி அநுரகுமார வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 02

அனர்த்த நிலைமைக்குப் பிறகு, சேதமடைந்த நெடுஞ்சாலைகள் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்புகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் நிதி திரட்டுவதற்காக, அரச மற்றும் தனியார் துறைகளை இணைத்து, மத்திய தர மற்றும் நீண்ட கால வேலைத்திட்டம் ஒன்றை தொடங்க, அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதற்கமைய, அனைவரின் பங்களிப்புடன் கூடிய 07

## மன்னார் குஞ்சுக்குளம் மக்களுக்கு ஹெலி ஊடாக உலருணவு பொருள்

மன்னார், டிசெ. 02

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக தரைவழிப் பாதை முழுமையாக துண்டிக்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட குஞ்சுக்குளம் கிராம மக்களுக்கு கடந்த மூன்று தினங்களுக்கு பின்னர் நேற்று காலை ஒரு தொகுதி உலர் உணவு மற்றும் மருத்துவ பொருட்கள் விசேட ஹெலி மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

தரைவழிப்பாதை துண்டிக்கப்பட்ட 07

சீரற்ற காலநிலை:

## 390 பேர் உயிரிழந்தனர்

கொழும்பு, டிசெ. 02

நாட்டில் நேற்று மாலை 6 மணி நிலவரப்படி, நாட்டில் நிலவும் அதிதீவிர வானிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 390 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், 367 பேர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் 07

## மோசமான காலநிலை காரணமாக யாழில் 15,431 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02

சீரற்ற காலநிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் 15,431 குடும்பங்களைச் சேர்ந்த 49,191 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது மூவர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்துள்ளனர். அத்தோடு 2 வீடுகள் முழுமையாகவும் 276 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. அத்துடன், தற்போது 51 இடைத்தங்கல் முகாம்களில் 4,547 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இடிந்து வீழ்ந்த நாயாறு பாலம்!

முல்லைத்தீவு, டிசெ. 02

முல்லைத்தீவு, நாயாறு பிரதான பாலம் வெள்ளப் பெருக்கு காரணமாக முழுமையாக உடைந்துள்ளது.

இதனால், குறித்த வீதியினூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பாலம் உடைந்ததன் காரணமாக முல்லைத்தீவிலிருந்து மணலாறு, திருகோணமலை, கொக்கிளாய் பகுதிகளுக்கான



போக்குவரத்து நடவடிக்கைகள் அனைத்தும் ஸ்தம்பித்துள்ளதாக அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# வத்திராயனில் பல இடங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன

## கிணறுகளிலும் நீர் நிரம்பல்

யாழ்ப்பாணம், டிசெ. 02


சீரற்ற கால நிலையால் வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில் வத்திராயனில் பல இடங்களில் வெள்ள நீர் தேங்கி மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்துள்ளது.

வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளதால் அப்பகுதி மக்கள் சிலர் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர்.

கிணறுகளிலும் நீர் நிரம்பி வழிவதால் அப்பகுதி மற்றும் ஏனைய மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(அ-02-08)




# மன்னாரில் உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை

மன்னார், டிசெ. 02

மன்னார் மாவட்டத்தில் இதுவரை உத்தியோகபூர்வ உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்று மன்னார் அரசாங்க அதிபர் கனகேஸ்வரன் உறுதிப்படுத்தினார்.

மன்னார் மாவட்டத்தில் சிலரின் உடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று கிடைத்த தகவல்கள் குறித்து, அவரிடம் வினவிய போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய யாரேனும் உயிரிழந்துள்ளனரா என்பது குறித்து, தாம் ஆராய்ந்தபோது எந்தவொரு சம்பவமும் பதிவாகவில்லை என்றும் அவர் கூறினார்.

எனினும், மாடு மேய்க்கச் சென்றவர்கள் உள்ளிட்ட 5 பேர் காணாமல்போயுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரன் தெரிவிததுள்ளார்.

(அ)

# யாழ்.- நயினை போக்குவரத்து வழமைக்கு!

யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ்ப்பாணத்தில் இருந்து நயினாதீவுக்கு பயணிப்பதற்கான போக்குவரத்து சேவைகள் மற்றும் படகு சேவைகள் நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக தீவகங்களுக்கான கடல் வழி போக்குவரத்துக்கள் முற்றாக தடைப்பட்டன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் முதல் சீரான காலநிலை நிலவுதானால் தீவகத்துக்கான கடல் வழி போக்குவரத்து சேவைகள் நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# முல்லைத்தீவில் பாதிக்கப்பட்டோருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நிவாரணம்

வடமராட்சி, டிசெ. 02

வடமராட்சி தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளை, கேப்பாபிலவு மாதிரி கிராமம், பிலக்குடியிருப்பு பகுதிகளை சேர்ந்த தெரிவு செய்யப்பட் 40 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசியமான உலருணவு பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.

குறித்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவா மிகள் நேரடியாக வழங்கி வைத்ததுடன் இந்நிகழ்வில் கேப்பாபிலவு - 102 கிராமசேவையாளர் முஹமது ராஸித், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

(அ-02-08)



# வெள்ளம் பாதித்த மக்களுக்கு உணவு

வடமராட்சி, டிசெ. 02

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கொடிகாமத்தைச் சேர்ந்த மக்களுக்கு சமைத்த உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சமைக்க முடியாத நிலையில் உள்ள மக்களுக்கே நேற்று திங்கட்கிழமை 225 உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்கள் சகிதம் நேரடியாக சென்று உணவுப் பொதிகளை வழங்கினார். (ஐ-02-08)

# 9 குடும்பங்கள் இடப்பெயர்வு

வடமராட்சி, டிசெ. 02

வெள்ளப் பாதிப்பால் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 9 குடும்பங்கள் இடைக்கால முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

நாகர் கோவில் கிழக்கில் 7குடும்பங்கள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நாகர் கோவில் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பணிமனையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆழியவளையில் 2 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் ஆழியவளை கலைவாணி முன்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-02-08)

# அனலைதீவில் நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு உதவிய கடற்படை

யாழ்ப்பாணம், டிசெ. 02

அனலைதீவிலிருந்து நோய்வாய்ப்பட்ட குழந்தையை அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு கடற்படையினர் உதவியுள்ளனர்.

கடற்படைப் படகின் மூலம் ஊர்காவற்றுறை தீவில் உள்ள கரம்பொன் இறங்குது றைக்கு குழந்தையைக் கொண்டு வர கடற்படையினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு நடவடிக்கை எடுத்தனர்.

(அ)

# சீரற்ற காலநிலையால் பாதிப்புற்ற புங்குடுதீவு மக்கள் பாடசாலையில்

யாழ்ப்பாணம், டிசெ. 02

சீரற்ற காலநிலையால் வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு மக்களும் பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களில் 22 குடும்பங்களை சேர்ந்த 62 பேர் புங்குடுதீவு மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் வேலணை பிரதேச சபை தவிசாளர் சி. அசோக்குமார் பாதிக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து அவர்களின் குறைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். (அ)

# நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி இல்லை



மன்னார், டிசெ. 02

மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கான சமைத்த உணவுகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டபோதும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய வகையில் சமைத்த உணவுகள் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மற்றும் வெள்ளப் பகுதியில் இருந்து வெளிவரமுடியாத மக்களுக்கு கடற்படையினரின் உதவியுடன் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோசனைக்கு அமைய மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மாவட்டத்தில் தொடர்ச்சியாக துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தொடர்ச்சியாக அவர்கள் இரவு பகல் பாராது கடமையை முன்னெடுத்து வருகின்றனர். மன்னார் மாவட்டத்தில் பொலிஸார், இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படையினர் தொடர்ச்சியாக மக்களின் பாதுகாப்புக்காக செயல்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் பாதிக்கப்பட்ட இடம் பெயர முடியாத மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவுகள் உரிய முறையில் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேச செயலாளர் மற்றும் அப்பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து பாதிக்கப்பட்டு இக்கட்டான நிலையில் உள்ள மக்களுக்கான சமைத்த உணவை வழங்க துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அந்த மக்கள் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.12.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

# நெருக்கடியில் எதிக்கட்சிகளின் அரசியல்

பாராளுமன்ற விவாதத்தின்போது எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்திருக்கின்றன. அவற்றுடன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் வெளியேறியது. இந்த விடயத்தில் இலங்கைத் தமிழ் அரசு கட்சி ஏன் அவசரப்பட்டது? உண்மையில், தமிழ் மக்கள் சார்பில் அரசாங்கத்துடன் பேச்சில் ஈடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் ஒரு கட்சி இவ்வாறான நகர்வுகளை மேற்கொள்வது புத்திசாதுர்யமானது அல்ல. நிலைமைகள் எதுவாக இருந்தாலும் அடுத்த தேர்தல் வரையில் தேசிய மக்கள் சக்திதான் ஆட்சியில் இருக்கப்போகின்றது.

பேரிடர் மீட்பு நடவடிக்கையை அரசாங்கம் சரிவரச் செய்யவில்லை என்னும் குற்றச்சாட்டை முன்வைத்தே எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்திருக்கின்றன. இலங்கையின் அரசியல் வரலாற்றில் இது புதிய விடயமோ அத்துடன், ஆச்சரியத்துக்குரிய விடயமோ அல்ல. ஏனெனில் ஆளும் தரப்பு ஒன்றை மேற்கொள்ளும்போது எதிர்க்கட்சிகள் அதனை எதிர்ப்பதும் தவறுகளை சுட்டிக்காட்டுவதும் இலங்கையின் அரசியல் கலாசாரமாகவே தொடர்கிறது.

சந்திரிகா குமாரதுங்க ஒப்பீட்டடிப்படையில் மிகவும் சிறப்பான ஓர் அரசியல் தீர்வு யோசனையைக் கொண்டு வந்தபோது, அப்போதைய எதிர்க்கட்சியான ரணில், தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அதனை எதிர்த்தது. ஆனால், அதே ரணில் விக்கிரமசிங்க பின்னர் விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்பாட்டை மேற்கொண்டார். அப்போது, திடீரென்று ரணில் அரசாங்கத்துக்கு எதிராக சந்திரிகா குடைச்சல் கொடுக்கத் தொடங்கினார். ரணிலை மிகவும் மட்டமாக தாக்கினார். ரணிலின் நகர்வுகளை அப்போது எதிரணியில் இருந்த ஜே. வி. பி. கடுமையாக எதிர்த்தது.

சமாதான உடன்பாட்டை எதிர்த்து ஜே. வி. பி. ஊர்வலங்களை முன்னெடுத்தது. சுனாமி கட்டமைப்பை எதிர்த்தது. ஆட்சிக்கு வரும் வரையில் ஆளும் தரப்பின் அனைத்து விடயங்களிலும் பிழை பிடிப்பதையே ஜே. வி. பி. ஒரு பிரதான அரசியல் வேலைத்திட்டமாகக் முன்னெடுத்துது. கோட்டாபயவுக்கு எதிரான அறகலய எழுச்சியை மிகவும் கவனமாக அறுவடை செய்தது. அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டது.

அப்படிப் பார்த்தால் கோட்டாபயவுக்கு கொரொனா போன்றுதான் ஜனாதிபதி அநுரவுக்கு சூறாவளி பேரழிவு. இப்போது இதனை வைத்து எவ்வாறு அநுரவின் செல்வாக்கை சரிக்கலாம் என்று எதிர்க்கட்சிகள் திட்டமிடுகின்றன. சூறாவளியில் அநுர அலையின் தலை தப்புமா அல்லது சூறாவளி அலை அநுர அலையையும் கொண்டு சென்றுவிடுமா என்பதுதான் கேள்வி. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் அனைத்து எதிரணியினரும் பேராசை கொண்டிருப்பதாகவே தெரிகிறது. இது இலங்கை அரசியலின் வாழையடி வாழை.

உண்மையில் ஓர் எதிர்க்கட்சி அரசியல் என்பது மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். விடயம் நாட்டுக்கு நல்லதென்றால் அதனை எதிர்க்கட்சியும் ஆதரிக்க வேண்டும். ஆனால், இலங்கையின் அரசியல் கட்சிகளில் இந்த அரசியல் முதிர்ச்சி பண்பு எப்போதுமே இருந்ததில்லை.

சேனநாயக்க - பண்டாரநாயக்க காலத்தின் அரசியல் கலாசாரம் இப்போதும் அப்படியே தொடர்கிறது. மறுபுறும் தமிழர் அரசியிலிலும் அதே கதைதான் தொடர்கின்றது. ஆட்சியாளர்களை சிறந்த பாதையில் பயணிக்கச் செய்ய வைப்பதற்கான அழுத்தத்தை கொடுப்பதுதான் எதிர்க்கட்சிகளின் பிரதான செயல்பாடாக இருக்க வேண்டும். ஆனால், இலங்கைத் தீவில் அவ்வாறான அரசியல் முன்னெடுப்புகளை காண்பதானது முயலில் கொம்பை தேடுவதற்கு ஒப்பானது.

## நிவாரண உதவிக்கு நிதி வழங்க புதிய இணையத்தளம் அறிமுகம்!

கொழும்பு, டிசெ. 02

அதிதீவிர வானிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளுக்காக, நிதி உதவி வழங்குவதை இலகுபடுத்தும் வகையில், டிஜிற்றல் பொருளாதார அமைச்சு உத்தியோகபூர்வ இணையத்தளமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்கு "Stand With Sri Lanka" என பெயரிடப்பட்டுள்ளது. இதன் இணையத்தள முகவரி https://donate.gov.lk/ ஆகும்.

உலகளாவிய சமூகம், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள பிரஜைகள், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்குகளுக்கு நிதி உதவியை வழங்க முடியும்.

குறித்த உத்தியோகபூர்வ இணையத்தளத்தில், அனைத்து நிதிப் பங்களிப்புகளையும் பாதுகாப்பாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செலுத்துவதற்கான வழிமுறைகள் உள்ளன.

அத்துடன், அனைத்து நிதிப் பங்களிப்புகள் குறித்த சரியான தகவல்களும், கணக்கு விவரங்களும் இந்த இணையத்தளத்தில் உள்ளிடப்பட்டுள்ளன.

இந்த நிதிப் பங்களிப்புகளில் 100 வீதமானவை பின்வரும் அரசாங்கத்தின் அவசர நிவாரண நடவடிக்கைகளுக்கு நேரடியாகப் பயன்படுத்தப்படும் என அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குதல். நோய் பரவலைத் தடுக்க சுத்தமான குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல். காயமடைந்தவர்கள் மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மக்களுக்கு அவசர மருத்துவ உதவிகளை வழங்குதல். எல்லாவற்றையும் இழந்தவர்களுக்குத் தற்காலிக தங்குமிடங்கள் மற்றும் நிவாரணப் பொதிகளை வழங்குதல். (அ)

## சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பிக்க விசேட நிவாரண காலம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 02

தற்போதைய இக்கட்டான நிலைமையை கருத்திற்கொண்டு, 2025.11.25ஆம் திகதி முதல் 2025.12.25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிகாலம் முடிவடையுமாயின், அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துக் கொள்வதற்கு விசேட நிவாரண காலத்தை வழங்குவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

செல்லுபடிகாலம் நிறைவடைந்த சாரதி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்துபவர்களை "வீதி சட்டத்தை மீறியதாக கருத வேண்டாம்" என்று பொலிஸ் திணைக்களத்தின் போக்குவரத்து பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் மோசமான சீரற்ற காலநிலை மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பெரும்பாலான சாரதிகள் குறித்த தினத்தில் தமது சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்க மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் காரியாலயத்துக்கு செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது.

இந்த நிவாரண காலத்தில் குறித்த சாரதி தண்டப்பணம் செலுத்தாமலோ அல்லது சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படாமலோ எவ்வித தடையுமின்றி அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துக் கொள்ளலாம்.

எனினும், 2025.12.25ஆம் திகதிக்குள் சாரதி அனுமதி பத்திரத்தை சாரதிகள் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## எச்சரிக்கை மீளப்பெறப்பட்டது

கொழும்பு, டிசெ. 02

இலங்கையைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளுக்குள் கடற்படை மற்றும் மீனவ சமூகங்கள் செல்லவேண்டாம் என்று முன்னர் விடுக்கப்பட்ட எச்சரிக்கை மீளப் பெறப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

காங்கேசன்துறைக்கு வடகிழக்கே சுமார் 300 கி.மீ தொலைவில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாட்டிலி ருந்து விலகி வடக்கு நோக்கி நகர்ந்து மேலும் பலவீனமடைய வாய்ப்புள்ளதால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் களுத்துறையிலிருந்து காலி, மாத்தறை வழியாக பொத்துவில் வரையிலான கடற்கரைக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை வழியாக மன்னார் வரையிலான கடற்கரைக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் சில இடங்களில் மழை பெய்யக்கூடும்.

காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும் காற்றின் வேகம் மணிக்கு 25-35 கி.மீ. வரை இருக்கும் எனக் கூறப்பட்டது. (அ)

## ட்ரோன் பறக்க விடுவதை தவிருங்கள்!


கொழும்பு, டிசெ. 02

அனர்த்த பகுதிகளில் பொது மக்கள் ட்ரோன்களைப் பறக்க விடுவதைத் தவிர்க்குமாறு விமானப் படை வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறான கட்டுப்பாடற்ற செயல்பாடுகள், முக்கியமான மீட்பு விமானப் பயணங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அனைத்து ட்ரோன்களின் புறப்படுதல் மற்றும் தரையிறக்கங்கள் ஆகிய விவரங்கள் முன்கூட்டியே 011 234 3970, 011 234 3971 அல்லது 115 இலக்கங்களுக்குத் தொடர்புகொண்டு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**
சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். மற்றவர்களை விமர்சிக்க வேண்டாம். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**இடபம்**
வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**மிதுனம்**
பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும். சாதிக்கும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

**கன்னி**
சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிட்டும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்**
குடும்பத்தினார் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**விருட்சிகம்**
பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு**
அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்**
இதுவரை இருந்த காரியத்தடைகள் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் லாபம் வரும். புது வாய்ப்புகள் தேடி வரும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும்.

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 02

“டித்வா” சூறாவளியானது நலிவடைந்து ஓர் ஆழ்ந்த தாழமுக்கமாக காங்கேசன்துறைக்கு வடக்கு - வடகிழக்குத் திசையில் சுமார் 300 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது மேலும் நலிவடைந்து வட திசையை நோக்கி நாட்டை விட்டு அப்பால் நகர்ந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு, சப்ரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும்.

ஊவா மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களிலும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்களுக்கு மறு அறிவித்தல் வரையில் மீனவர்களும் கடல்சார் ஊழியர்களும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

களுத்துறை தொடக்கம் காலி, மாத்தறை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றர் வேகத்தில் தென்மேற்குத் திசையில் இருந்து காற்று வீசக் கூடும்.

புத்தளம் தொடக்கம் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான அத்துடன் காலி தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்

இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# வெள்ளத்தில் சிக்கித்தவித்த காரை மீட்ட கடற்படையினர்

வவுனியா, டிசெ. 02

கனமழை காரணமாக வவுனியா- செட்டிக்குளம் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை அடுத்து, கடற்படை அனர்த்த நிவாரணக் குழுக்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதவாச்சி - மன்னார் வீதியில் உள்ள செட்டிக்குளம் பகுதியில் வெள்ளத்தில் மூழ்கிய காரையும் அதில் இருந்தவர்களையும் மீட்டனர்.

இதன்படி, வெள்ளத்தில் சிக்கிய கார் கடற்படை அனர்த்த வாகனம் மூலம் பாதுகாப்பாக மீட்கப்பட்டது. (எ)

# கற்கோவளத்தில் 386 குடும்பங்களுக்கு உணவு வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 02

சூறாவளி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு கற்கோவளம் பகுதியில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தால் அரசால் ஒதுக்கப்பட்ட அனர்த்த நிதியிலிருந்து நேற்று முன்தினம் இரவு உணவு வழங்கப்பட்டது.

வடமராட்சி வடக்கு பிரதி பிரதேச செயலர் தயானந்தன், கணக்காளர் ஆகியோர் நேரடியாக சென்று உணவு வழங்கினர்.

386 குடும்பங்களைச் சேர்ந்த 1257 பேர் இடைத்தங்கல் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# வடக்கு புகையிரத வீதி மிக மோசமாக சேதம்: ரயில் சேவை மீள ஆரம்பிப்பது தாமதமாகும்

கொழும்பு, டிசெ. 02

வடக்கு புகையிரத வீதி மற்றும் மலையக புகையிரத வீதி மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கால் மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் இப்பகுதிகளுக்கான ரயில் சேவைகள் மீள ஆரம்பிப்பது தாமதமாகும் என புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவிய மோசமான காலநிலையால் கடந்த வாரம் பொதுப்போக்குவரத்து சேவை முழுமையாக ஸ்தம்பிதமடைந்திருந்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரதான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியமை, பாலம் உடைந்தமை உள்ளிட்ட காரணிகளால் பேருந்து சேவை இடைநிறுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் மழைவீழ்ச்சி குறைவான மட்டத்தில் பதிவாகியதை தொடர்ந்து பொதுப்போக்குவரத்து சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ஆகிய அனர்த்தங்களால் மலையகத்துக்கான புகையிரத சேவை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. மலையக புகையிரத வீதிகள் மற்றும் சமிஞ்சை கருவிகள் முழுமையாக சேதமடைந்துள்ளதால் மலையகத்துக்கான புகையிரத சேவையை மீள ஆரம்பிப்பதை உறுதியாக குறிப்பிட முடியாது. தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று புகையிரத திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு புகையிரத பாதை வெள்ளத்தில் மூழ்கியதை தொடர்ந்து பொலநறுவை, மன்னம்பிட்டிய ஆகிய பகுதிகளில் புகையிரத பாதைகள் சேதமடைந்துள்ளதால் வடக்கு புகையிரத சேவையை ஆரம்பிப்பதிலும், கிழக்குக்கான புகையிரத சேவையை ஆரம்பிப்பதிலும் தாமதம் ஏற்படும் என புகையிரத திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (எ)

# யாழில் சீரற்ற காலநிலையால் இதுவரை 46, 638 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக 14 ஆயிரத்து 624 குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 638 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

அத்தோடு மூவர் உயிரிழந்ததுடன் இருவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் 2 வீடுகள் முழுமையாகவும் 267 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது 57 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு 5ஆயிரத்து 323 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு 100,000 டொலர்களை நன்கொடையாக வழங்கியது சீனா!

## இலங்கை செஞ்சிலுவை சங்கத்திடம் கையளிப்பு

கொழும்பு, டிசெ. 02

**டித்வா புயலால் ஏற்பட்ட கடுமையான வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியதை அடுத்து,சீன அரசாங்கம் இலங்கைக்கு 100,000 அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.**

சீன செஞ்சிலுவைச் சங்கம் அவசர நிதி உதவியாக 100,000 அமெரிக்க டொலர் தொகையை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம் வழங்கியதாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

மேலும், அனர்த்த நிவாரணப் பணிகளை வலுப்படுத்தும் வகையில், இலங்கையில் உள்ள சீன வர்த்தக சம்மேளனம் மற்றும் வெளிநாட்டு சீனச் சங்கம் இணைந்து நன்கொடை திட்டங்களை ஆரம்பித்துள்ளன.

இந்த இரு அமைப்புகளும் இணைந்து அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் 10 மில்லியன் இலங்கை ரூபாயைத் திரட்டியுள்ளன. (அ)

# பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு உதவ அவசர ஒருங்கிணைப்பு பிரிவு!

கொழும்பு, டிசெ. 02

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கான நிவாரண முயற்சிகளை நிர்வகிக்கவும், நெறிப்படுத்தவும் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு அவசர ஒருங்கிணைப்புப் பிரிவை நிறுவியுள்ளது.

இந்த முக்கியமான காலகட்டத்தில் சரியான நேரத்தில் உதவி வழங்குவதற்கும் பயனுள்ள தகவல்தொடர்புகளை உறுதி செய்வதற்கும் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை இந்த முயற்சி பிரதிபலிக்கிறது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள், இலங்கையில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திர முகமைகள் மற்றும் பிற பங்குதாரர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகளை ஒருங்கிணைப்பதற்கான மையப் புள்ளியாக அவசர ஒருங்கிணைப்புப் பிரிவு செயல்படும்.

நன்கொடைகளை நிர்வகிப்பதோடு மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தங்கள் உறவினர்களுடன் இணைவதற்கான மையப் புள்ளியாகவும் இந்தப் பிரிவு செயல்படும்.

வெளிநாடுகளில் உள்ள நலம் விரும்பிகளிடமிருந்து உதவிகளைப் பெறுவதற்கும், சர்வதேச ஆதரவு தேவைப்படுபவர்களை உடனடியாகவும் திறமையாகவும் சென்றடைவதை உறுதி செய்வதற்கும் இது உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# எரிவாயு தட்டுப்பாடு இல்லை!

கொழும்பு, டிசெ. 02

வீட்டுப் பாவனைக்கான எரிவாயு சிலிண்டர்களின் கையிருப்பு போதுமான அளவு இருப்பதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி எரிவாயு நிரப்பும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், அனர்த்தம் காரணமாக செல்ல முடியாத பகுதிகளுக்கு எரிவாயு விநியோகத்தை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

அத்துடன் எரிவாயுவைப் பெறுவது குறித்த தேவையான தகவல்களை 1311 என்ற துரித இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# சிறுவர் பராமரிப்பு நிலையங்களை மீண்டும் திறக்குமாறு பணிப்புரை!

கொழும்பு, டிசெ. 02

நாட்டில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை நேற்று முதல் மீண்டும் திறக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அனர்த்த நிலைமையில் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரச மற்றும் தனியார் துறைகளில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மற்றும் தொழில் நிபுணர்களின் குழந்தைகளுக்குப் பராமரிப்பு வழங்குவதற்காக, நேற்று முதல் பாதுகாப்பான சிறுவர் பராமரிப்பு நிலையங்களை மீண்டும் திறக்குமாறு அனைத்து சிறுவர் பராமரிப்பு நிர்வாகிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# குடிதண்ணீரை பயன்படுத்தும்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும்!

கொழும்பு, டிசெ. 02

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் குடிதண்ணீரைப் பயன்படுத்தும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிணற்று நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்க செயலாளர் சமில் முத்துக்குடா குடியிருப்பாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

வயிற்றுப்போக்கு போன்ற நீரினால் பரவும் நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகம் என்பதால், கொதிக்க வைத்த தண்ணீரைக் குடிப்பதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

சிறுவர்களுக்கு கொதித்து ஆறிய நீரை மாத்திரம் அருந்துவதற்கு வழங்க வேண்டும் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

மேலதிகமாக, தற்போதைய பேரிடர் சூழ்நிலை வீடுகளைச் சுற்றி நுளம்புகள் பெருகும் இடங்களை உருவாக்கக்கூடும்.

எனவே, டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க, தங்கள் வீடுகளை சுத்தம் செய்யும் போது, இந்த இனப்பெருக்க இடங்களை அகற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் பொதுமக்களை வலியுறுத்தினார். (அ)

# நம்பொடையில் சிக்கித் தவித்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மீட்ட விமானப்படை!

கொழும்பு, டிசெ. 02

அதிதீவிர வானிலை காரணமாக நுவரெலியாவின் றம்பொடை பகுதியில் சிக்கித் தவித்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் குழுவை விமானப்படை மீட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் குழுவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 21 சுற்றுலாப் பயணிகள் அடங்குவதாக சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, இந்தக் குழுவில் 11 இந்தியச் சுற்றுலாப் பயணிகள், 04 தென்னாபிரிக்கச் சுற்றுலாப் பயணிகள், 02 ஜேர்மன் சுற்றுலாப் பயணிகள், 02 பிரித்தானியச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் 02 ஸ்லோவேனிய சுற்றுலாப் பயணிகள் அடங்குவர்.

இந்த சுற்றுலாப் பயணிகள் குழு உலங்கு வானூர்தி மூலம் கொழும்புக்குப் பாதுகாப்பாக அழைத்து செல்லப்பட்டது.

# 2,500 தொலைத்தொடர்பு கோபுரங்கள் சீரமைப்பு!

கொழும்பு, டிசெ. 02

நாட்டில் உள்ள 16,000 தொடர்பாடல் கோபுரங்களில் அனர்த்த நிலைமை காரணமாக 4,000 கோபுரங்கள் துண்டிக்கப்பட்டிருந்ததாகவும், அவற்றில் இதுவரை சுமார் 2,500 கோபுரங்கள் மீண்டும் சீரமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பல தொடர்பாடல் அமைப்புகள் மாகாணங்களுக்கிடையே பைபர் தொழில்நுட்பம் மூலமாகவே இணைக்கப்பட்டுள்ளன.

மண்சரிவுகள் மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக பல இடங்களில் இந்த பைபர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

2 நாட்களுக்கு முன்னர் நுவரெலியா, குருநாகல் உள்ளிட்ட பல பிரதேசங்களில் பல இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

இதன் காரணமாக கொழும்புடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதால், பல மாகாணங்கள் பிரச்னைகளை எதிர்கொண்டன.

எனினும், தற்போது துண்டிக்கப்பட்டிருந்த 11 பைபர் இணைப்புகளில் 2 இடங்கள் தவிர ஏனைய அனைத்தும் சீரமைக்கப்பட்டுள்ளன.

100 வீத இணைப்பு கிடைக்கப்பெறாவிட்டாலும், சாதாரண நிலையை அடைந்துள்ளோம் என டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார். (அ)

எச்சரிக்கை!
உங்கள் வீட்டில் சட்டவிரோத இந்தியன் DTH (DishTV) இருக்கிறதா?
SUN DIRECT | TATA sky | dishtv | VIDEOCON d2h Digital DTH Service
இவற்றை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும் இரண்டுமே சட்டவிரோதம்!
அவசியமற்ற சட்டப்பிரச்சனைகளை தவிர்க்க, இன்று எமது சட்டபூர்வ கேபிள் டிவி இணைப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!
It has come to our notice that illegal DTH (Dish TV) service providers are advertising unverified services through social media platforms. While we have initiated measures to stop such illegal operations, TRC would like to notify all consumers to be cautioned of obtaining services from such illegal vendors or making any type of payments. You may refer http://www.trc.gov.lk/direct-to-home-satellite-broadcasting-operators.html for information on authorized DTH operators before subscribing for such services.
Telecommunications Regulatory Commission of Sri Lanka

155 செனல்கள் 1420/- ரூபா (அனைத்துவரிகளும் சேர்த்து)
புதிய இணைப்புக்கு 10,000/- ரூபா மட்டுமே!
தொடர்புக்கு 0707 888 999
Ask CABLE VISION
உங்கள் நம்பிக்கைக்குரிய கேபிள் டிவி சேவை!
நம்பகமான சேவை | தெளிவான படம் மற்றும் ஒலி | சட்டபூர்வ பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



*சீரற்ற காலநிலை காரணமாக*

# நுவரெலியாவில் இதுவரை 75 பேர் பலி! 62 பேர் மாயம்

நுவரெலியா, டிசெ. 02

நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 75 பேர் உயிரிழந்தனர். மேலும் 62 பேர் காணாமல் போயுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 2,691 குடும்பங்களைச் சேர்ந்த 12, 304 பேர் இந்த மோசமான காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில், 1914 குடும்பங்களைச் சேர்ந்த 8,654 பேர் 61 தற்காலிக தங்குமிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகள், உணவு மற்றும் பிற அடிப்படை வசதிகள் வழங்கி வருவதாகவும், மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னக்கோன் தெரிவித்தார்.

மேலும், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும், நுவரெலியா நோக்கிப் பயணம் மேற்கொண்டுள்ளவர்கள் நிலைமை சீராகும் வரை பாதுகாப்பான இடங்களில் தங்கியிருப்பது அவசியம் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# மரக்கறிகளின் விலைகள் கிடுகிடுவென அதிகரிப்பு

தம்புள்ளை, டிசெ. 02

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு கிடைக்கும் மரக்கறிகளின் மொத்த விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

இதன்படி, ஒரு கிலோ கிராம் கரட் 700 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன், போஞ்சி, லீக்ஸ் போன்ற மரக்கறிகளும் 500 ரூபாய் முதல் 800 ரூபாய் வரை அதிகரித்துள்ளன.

30 ரூபாய்க்கு விற்பனையான ஒரு கிலோ கிராம் பூசணிக்காயின் விலையும் 100 முதல் 130 வரை தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

மழை மற்றும் மண்சரிவு காரணமாக பெரும்பாலான மரக்கறித் தோட்டப் பயிர்கள் அழிவடைந்தமையே இந்த விலை உயர்வுக்கு காரணம் என தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் தெரிவித்தனர். (எ)

# திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியது

திருகோணமலை, டிசெ. 02

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி மூதூர் பகுதியில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

மாவிலாறு அணைக்கட்டு உடைப்பெடுத்தாமை காரணமாக இவ்வாறு அந்த வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

அப்பகுதியில் தொடர்ந்து நீர் மட்டம் அதிகரித்து வருகிறது.

இதேநேரம் வெள்ளத்தால் கந்தளாய் வீதியின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவிலாறு அணைக்கட்டு உடைந்ததன் காரணமாக அனர்த்தத்துக்குள்ளான 309 பேர் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

அதிக மழைவீழ்ச்சி காரணமாக நிரம்பி வழிந்த திருகோணமலை மாவிலாறு அணைக்கட்டின் ஒரு பகுதி உடைந்ததால், அப்பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதன்படி, நேற்று முன்தினம் காலை வரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 309 பேர் மூதூர் பிரதேசத்தில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டு, மூதூர் கல்கந்த விகாரை வளாகத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கடற்படைக்குச் சொந்தமான படகுடன் கடலோர ரோந்துப் படகு என்பன மூதூர் பிரதேசத்தை அண்மித்த கடல் பகுதியில் அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண நடவடிக்கையை கடற்படையினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பாதிப்புக்குள்ளான இடங்களில் பாதுகாப்பு பிரதியமைச்சர் ஆய்வு

பதுளை, டிசெ. 02

பதுளை மாவட்டத்தில் மோசமான வானிலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நலன் தொடர்பில் தேடிப்பார்த்து மதிப்பாய்வு செய்வதற்கும் அனர்த்த மீட்பு நடவடிக்கைகளை மதிப்பிடுவதற்கும் பாது காப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஹப்புத்தளை கிளநோர் தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மையம் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள போவைஸ் வித்தியாலயத்துக்கு பிரதி அமைச்சர் சென்றார்.

இதன்போது பாதுகாப்பு பிரதி அமைச்சர் அங்கு ஏற்பாடு செய்துகொடுக்கப்பட்டுள்ள வசதிகளை ஆய்வு செய்தார்.

அத்துடன், அத்தியாவசிய சேவைகள், தங்குமிடம், மருத்துவ உதவி, உணவு மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட உடனடித் தேவைகள் தொடர்பில் பார்வையிட்டு, விடயமறிந்துகொண்டதோடு, அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களின் நலன் தொடர்பிலும் விசாரித்தார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள பதுளை முத்தியங்கனை விகாரை, பதுளை நகர முஸ்லிம் பள்ளிவாசல் மற்றும் நெலும்கமுவ மகா வித்தியாலயத்துக்கும் பிரதி அமைச்சர் சென்றார்.

அத்துடன் நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பிரதி அமைச்சர் அறிவுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக அனர்த்த முகாமைத்துவ குழுக்கள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையினரிடையே ஒருங்கிணைந்த நடவடிக்கையையும் பிரதி அமைச்சர் வலியுறுத்தினார்.

# ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் மண்மேடுகளை அகற்றும் பணி தீவிரம்

ஹற்றன், டிசெ. 02

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் சரிந்த மண்மேடுகளை அகற்றும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகர தெரிவித்தார்.

ஹற்றன், வட்டவளை, தியகல மற்றும் களுகல ஆகிய பிரதேசங்களிலேயே இவ்வாறு மண்மேடுகள் சரிந்துள்ளன.

தற்போது, ஒரு வழித்தடத்தைத் திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள், தனியார் உரிமையாளர்களால் வழங்கப்பட்ட பாரிய பெக்கோ இயந்திரங்கள் மூலம் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருப்பினும், குறித்த வீதியில் மேலும் மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதா என்பது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# திருகோணமலையில் பல குளங்கள் சேதமடையக்கூடிய அபாய நிலை!

திருகோணமலை, டிசெ. 02

மகாவலி கங்கையின் நீர்வரத்து அதிகரித்திருப்பதன் காரணமாக தாழ்நிலப்பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அத்தோடு, திருகோணமலை மாவட்டத்தில் பல குளங்கள் சேதமடையக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் சேருவல மற்றும் மூதூர் ஆகிய பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மகாவலி கங்கையின் நீர்வரத்து அதிகரித்திருப்பதன் காரணமாக தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக குளங்கள் வான் பாய்வதனால் குளக்கட்டுகள் மற்றும் வரம்புகள் சேதமடையக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது. மாவிலாறு அணைக்கட்டும் உடைப்பெடுத்திருப்பதன் காரணமாக அப்பகுதியில் இருக்கும் மக்களை அங்கிருந்து பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவது தொடர்பிலும் அவர்களை இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைப்பது குறித்தும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (எ-12)

# களனி கங்கை ஆற்றுப்படுகையில் அபாயகரமான வெள்ள நிலைமை

கொழும்பு, டிசெ. 02

களனி கங்கை ஆற்றுப்படுகையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால், ஹங்வெல்ல மற்றும் அதனை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் தற்போது உச்ச வெள்ள நிலைமை காணப்படுகிறது.

ஹங்வெல்ல அளவீட்டு நிலையத்தில் நீர் மட்டம் 9.78 மீற்றர் எனப் பதிவாகியுள்ளதுடன், இது ஏறக்குறைய ஒரு பெரும் வெள்ள நிலைமை என நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

களனி கங்கை ஆற்றுப்படுகையின் நீர் மட்டம் அதிகரித்ததன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்வள முகாமைத்துவப் பணிப்பாளர் எல். எஸ். சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நாகலகம் வீதியில் உள்ள அளவீடு 8.35 அடியாக காணப்படுவதுடன், இது அண்மைய வரலாற்றில் பதிவான அதிகபட்ச நீர் மட்டம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நீர் மட்டம் அதே மட்டத்தில் காணப்படுவதாகவும், நீர் மட்டம் மேலும் அதிகரிக்கவில்லை என்றும் தெரிவித்த அவர், களனி விகாரைக்கு அருகில் அமைந்துள்ள வெள்ள அணையானது தற்போது திட்டமிடப்பட்ட நீர் மட்டத்தின் அதிகபட்ச உச்ச அளவை அடைந்துள்ளது.

எதிர்காலத்தில் ஏதாவது ஆபத்து ஏற்படின், உடனடியாக அறிவிக்க எதிர்பார்ப்பதால், வெள்ள அணைக்கு அருகில் வசிக்கும் அனைவரும் அந்த அறிவிப்புகள் குறித்து அவதானத்துடன் இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

# எல்ல - வெல்லவாய வீதி போக்குவரத்துக்கு திறப்பு

பதுளை, டிசெ. 02

எல்ல - வெல்லவாய வீதி போக்குவரத்துக்காக முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட செயலாளர் பண்டுக்க சிறீ பிரபாத் அபேவர்தன தெரிவித்தார்.

அத்துடன், பதுளை மாவட்டத்தில் மேலும் பல வீதிகள் தற்போது போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் நிலவி வந்த மண்சரிவு அபாய நிலைமைகள் குறைவடைந்துள்ளதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# சீரற்ற காலநிலையால் திருமலையில் 22 ஆயிரத்து 232 குடும்பங்கள் பாதிப்பு

திருமலை, டிசெ. 02

சீரற்ற கால நிலை மற்றும் டித்வா புயல் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 22232 குடும்பங்களை சேர்ந்த 72254 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலக பிரிவை உள்ளடக்கிய 212 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 561 வீடுகள் பகுதியவில் சேதமடைந்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட 17004 குடும்பங்களைச் சேர்ந்த 56479 நபர்கள் உறவினர்கள் மற்றும் சொந்த வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

61பாதுகாப்பான தற்காலிக முகாம்களில் 5228 குடும்பங்களைச் சேர்ந்த 15775 பேர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாவிலாறு அணைக்கட்டு உடைப்பெடுத்ததன் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதுடன் மீட்பு நடவடிக்கைகளில் முப்படையினர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு எப்போதும்...

பேசினேன். நெருங்கிய மற்றும் நம்பகமான நண்பராக, இந்த கடினமான நேரத்தில் இலங்கை மற்றும் அதன் மக்களுக்கு இந்தியா உறுதியாக துணை நிற்கிறது.

நிவாரணம் மற்றும் மீட்பு முயற்சிகளுக்கு நடந்து வரும் ஒப்ரேஷன் சாகர் பந்துவின் கீழ் தேவையான அனைத்து ஆதரவையும் இந்தியா தொடர்ந்து வழங்கும், மேலும் மறுவாழ்வு மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளும்போது வரும் நாட்களில் இலங்கையுடன் துணை நிற்கும். - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## மன்னார் குஞ்சுக்குளம்...

நிலையில் குஞ்சுக்குளம் கிராம மக்கள் கடந்த மூன்று தினங்களாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்ததோடு,மருத்துவ தேவைகளையும் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது

குஞ்சுக்குளம் மற்றும் மாதா கிராம பகுதியில் சுமார் 304 குடும்பங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பாடசாலை,ஆலயம்,பொது மண்டபங்களில் தங்கியுள்ளனர்.இந்நிலையில் குறித்த உலர் உணவு பொருட்கள் மற்றும் மருத்துவ பொருட்களும் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டதுள்ளன. (அ)

## வட்டுவாகல்...

உத்தியேகத்தர்களும் இணைந்திருந்தனர்.

இந்த பாலத்தினூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதுடன் இதற்கு மாற்றுவழியாக புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவு வருபவர்கள் புதுக்குடியிருப்பு கேப்பாப்பிலவு வீதியைப் பயன்படுத்த முடியும்.

மிகக் குறுகிய நாட்களுக்குள் வட்டுவாகல் பாலத்தினால் பயணத்தினை மேற்கொள்வதற்காக மாவட்ட செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைய வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் இணைந்து பாலத்தின் திருத்த வேலைகளை ஆரம்பிக்கவுள்ளனர். (அ)

## வெள்ளம்...

முனசிங்க,நேற்று முப்படை பாதுகாப்பு தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகைகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், அவசர கால அனர்த்த சூழ்நிலையில் கொள்வனவு நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளருக்கும் 50 மில்லியன் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜயதிஸ்ஸ முனசிங்க தெரிவித்தார்.

உலர் உணவுக்காக இதுவரை பணத்தை வங்கியில் வைப்பிலிடும் முறைக்கு மேலதிகமாக தேவைக்கேற்ப உலர் உணவுப் பொருட்களை பொதியாக வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த உதவிச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் தமது பகுதிகளில் நிலவும் விசேட நிலைமைகளின் அடிப்படையில் பொருத்தமான குழுவொன்றின் மூலம் முடிவுகளை எடுக்கத் தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வெள்ளம் குறையும் நிலைமையில் தொற்று நோய்கள் மற்றும் நோய்க்கிருமிகளால் நோய்கள் பரவுவதற்கான அதிக ஆபத்து குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொண்ட உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க, இது தொடர்பாக சுகாதாரத் துறை உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்தார். (அ)

## கலா ஓயா...

70 பேர் வரை பய ணித்ததாக தெரிவிக்கப்பட்டது. முதல் கட்டமாக பஸ்ஸில் சிக்கியவர்கள் அருகில் இருந்த கடை யொன்றின் கூரை மீது ஏற்றி பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு, பின்னர் கடற்படையினரின் உதவியுடன் அவர்கள் படகுகளில் ஏற்றப்பட்டு இரு நாட்கள் கடுமையான போராட்டத் தின் மத்தியில் மீட்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த பஸ்ஸில் பயணித்த இளைஞர் ஒருவர் காணாமல்போயுள்ளதாக உறவினர்கள் நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் தனியார் வங்கி ஒன்றில் கடமையாற்றும் தணிகாசலம் பத்மநிகேதன் (வயது 36) என்ற இளைஞனே காணாமல் போயிருந்தார்.

கடையின் மேற்கூரையில் அமைந்திருப்பவர்கள் தொடர்பில் வெளியான காணொலி ஒன்றில் பத்மநிகேதன் காணப்படுகிறார். கடையின் கூரையில் இருந்தவேளை கூரையின் ஒரு பகுதி உடைந்து விழுந்ததாகவும், அதன்போது சிலர் வெள்ளத்தில் விழுந்த நிலையில் அங்கிருந்தவர்கள் அவர்களை மீட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதன்போதே அவர் காணாமற்போயிருந்தார்.

இந்நிலையில் காணாமற்போன இளைஞர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். உயிரிழந்தவர் வவுனியா வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தணிகாசலத்தின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையின் இடர் நிவாரண பணிக்கு ஐ.நா.வின் அவசரகால ஒருங்கிணைப்பு

கொழும்பு, டிசெ. 02

இலங்கையில் தற்போது நிலவி வரும் அனர்த்த நிலைமைக்கு நிவாரணம் அளிப்பதற்காக, ஐக்கிய நாடுகள தனது அவசரகால ஒருங்கிணைப்பு பொறிமுறையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

மிகவும் அவசரமான தேவைகளைக் கண்டறிவதற்காக, அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளுடன் இணைந்து பல்துறைத் தேவைகள் மதிப்பீட்டை மேற்கொள்ள ஐ.நா. நடவடிக்கை எடுத்துள்ளதுடன், உணவு பாதுகாப்பு, சுகாதாரம், நீர், கல்வி, பாதுகாப்பு, தங்குமிடம் மற்றும் ஆரம்பகால மீட்சி போன்ற துறைகளில் உள்ள தேவைகளைக் ஒருங்கிணைக்கத் தொடங்கியுள்ளது.

தேசிய மீட்பு மற்றும் ஆரம்பகால மீட்சி முயற்சிகளுக்கு ஆதரவளிக்க ஐ.நா. குழுக்கள் தயாராக இருப்பதாக ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிரஞ்சே உறுதிப்படுத்தினார்.

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை அணுகுவதில் சவால்கள் இருந்தபோதிலும், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், வெள்ளம் மற்றும் உள்கட்டமைப்புச் சேதம் காரணமாக இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்த பதுளை மாவட்டத்தின் 25 பாதுகாப்பு மையங்களுக்கு குடிதண்ணீரை விநியோகம் செய்துள்ளது.

மேலும், அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளும், அதிகளவில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் முப்படைகளுடன் இணைந்து செயல்பட அவசரக் குழுக்களை அனுப்பியுள்ளன. (அ)

## பதற்றம்...

பின்னர் படிப்படியாக மழை குறைந்துவிடும். ஆகவே இது தொடர்பாக பதற்றமடைய தேவையில்லை யாழ். பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீண்டும் ஒரு புயல் வருமா என பலர் வினவுகின்றார்கள். இன்றைய நிலையில் வங்காள விரிகுடாவில் டித்வா புயலைத் தவிர வேறு எந்த காற்றுச்சுழற்சியோ, வளிமண்டல மேலடுக்கு சுழற்சியோ இல்லை.

ஆனாலும் எதிர்வரும் ஜனவரி இறுதிப்பகுதி வரை வடகீழ்ப் பருவக்காற்று காலம் என்பதனால் அது வரைக்கும் இடையிடையே மிதமான, கனமான மற்றும் மிகக் கனமழைகள் கிடைக்கும் வாய்ப்புள்ளது என்பதனை நினைவில் கொள்க.

இடைப்பட்ட காலத்தில் ஏதாவது தீவிர வானிலை நிகழ்வுகள் இடம்பெறும் வாய்ப்பிருந்தால் உரிய காலத்தில் உங்களுக்கு தெரிவிக்கப்படும். அதுவரை தேவையற்ற வதந்திகளைப் புறந்தள்ளுங்கள்.

டித்வா புயல் தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுக்குறைந்து சென்னைக்கு கிழக்காக 60 கி.மீ. தொலைவில் நிலை கொண்டுள்ளது. இது அடுத்த 48 மணி நேரத்தில் சென்னைக்கு அண்மையாக கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டித்வா புயல் இன்னும் கரையைக் கடக்கவில்லை என்பதனால் வடக்கு மாகாணக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதில் அவதானமாக இருப்பது அவசியம்-என்றார். (அ)

## சேதமுற்ற...

நிதியமொன்றை நிறுவவும், நிதியத்தை முகாமைத்துவம் செய்ய, அமைச்சரவை அங்கீகாரத்துடன் கூடிய அரச மற்றும் தனியார் துறைகளைக் கொண்ட கூட்டு முகாமைத்துவக் குழுவை நியமிக்கவும் எதிர்பார்க்கப்படுவதாக, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு, ஜனாதிபதி அலுலகத்தில், தனியார் துறை முதலீட்டாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில், இவ்வாறு குறிப்பிட்டார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் நாடு அதிக அழிவைச் சந்தித்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, திறைசேரியின் நிதிகளால் மாத்திரம், அந்த சேதத்திற்கு முகங்கொடுக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

இதற்காக, பல வழிகளில் நிதி திரட்ட முடியும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களிடம் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும், சர்வதேச அமைப்புகள் மற்றும் வர்த்தக சங்கங்களிடம் இருந்தும், அதற்கான நிதியை திரட்ட முடியும் எனவும், அந்தப் பணிகள், நியமிக்கப்படும் குழுவிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அனர்த்த நிலைமை காரணமாக, வீடுகள், வயல்கள், பயிர் நிலங்கள், நெடுஞ்சாலைகள், பாலங்கள், அரச கட்டிடங்கள், பாடசாலைகள் மற்றும் சில இடங்களில், மின் கம்பங்கள் கூட சரிந்து விழுந்துள்ளதாகவும், மண்சரிவுகளால் சேதமாகிய வீதிக் கட்டமைப்பை, பாரிய அளவில் புனர்நிரமாணம் செய்ய வேண்டியுள்ளதாகவும், ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அனர்த்தத்தினால், ஒவ்வொரு துறைக்கும் ஏற்பட்டுள்ள சேதம் மற்றும் மீள் கட்டமைப்புக்கு தேவையான நிதிகள் தொடர்பான ஆவணத்தைத் தயாரிப்பது குறித்து, உலக வங்கியுடன் அரசாங்கம் கலந்துரையாடியுள்ளது.

## இலங்கைக்கு...

இலங்கை மீள்வதற்கு உதவுவதற்காக, செஞ்சிலுவை சங்கம், ஐ.நா. இலங்கை மற்றும் உள்ளூர் கூட்டாளர்களுடன் இணைந்து இந்த நிதிப் பங்களிப்பு மூலம் பிரித்தானியா பணியாற்றும் எனவும் பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

## 390 பேர் உயிரிழந்தனர்...

குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 1,564 பாதுகாப்பு தங்குமிடங்களில், 61,612 குடும்பங்களைச் சேர்ந்த 218,526 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

## மூளையில்...

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக 27ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

மூளையில் ஏற்பட்ட கிருமி தொற்று காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

## எலிக் காய்ச்சலினால்...

எலிக்காய்ச்சல் நோயினால் இரண்டு இறப்புகள் ஏற்பட்டுள்ளன. கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இந்த மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த வருடமும் யாழ். மாவட்டத்தில் நவம்பர், டிசம்பர் காலப்பகுதியில் தீவிரமாகப் பரவிய எலிக் காய்ச்சல் நோயினால் 8 இறப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

யாழ். மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமைக்குப் பின்னரே இந்த நோய்ப் பரம்பல் ஏற்பட்டுள்ளது. எலிக்காய்ச்சல் நோய் ஒரு வகை பற்றீரியாவினால் ஏற்படுகின்றது.

எலிகள் போன்ற விலங்குகளின் சிறுநீர் மூலம் வெள்ளநீர், வயல்நீர், சேற்று நிலங்களில் இக்கிருமிகள் சென்றடைகின்றன. மனிதர்கள் வெள்ளநீரில், வயல் நிலங்களில், சேற்று நிலங்களில் வேலை செய்யும் போது அவர்களின் தோலில் உள்ள புண்கள் அல்லது காயங்கள் மூலம் கிருமிகள் மனித உடலில் உட்செல்கின்றன.

இந்நோய் ஏற்படும் போது கடுமையான காய்ச்சல், கடுமையான தசைவலி, கடுமையான தலையிடி, இருமல், கண்கள் செந்நிறமாதல், வாந்தி, சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல், சிறுநீர் வெளியேறும் அளவு குறைதல் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம்.

இதனால் மனித உடலில் சிறுநீரகம், சுவாசத்தொகுதி, இதயம், ஈரல், மூளை போன்ற உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு மரணத்தை ஏற்படுத்தும். இந்நோயானது பெரும்பாலும் வயல்கள், சேற்று நிலங்களில் பயிர்செய்யும் விவசாயிகள் மத்தியிலும், கடல்நீரேரிகளில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவர்கள் மத்தியிலும், வெள்ளநீருடன் தொடுகையில் ஈடுபடுபவர்கள் மத்தியில் அதிகம் காணப்படுகின்றது.

இந்நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள வயல், சேற்று நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகள் கடல்நீரேரிகளில் மீன்பிடிப்பவர்கள் உடலில் காயங்கள் அல்லது புண்கள் இருப்பின் அவற்றை நீர் உட்புகாத வகையில் கட்டுப்போடுதல் வேண்டும். வெள்ளநீரில் அல்லது அசுத்தமான நீரில் பணியாற் றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கால், கைகளுக்கு பாதுகாப்பு அங்கிகளை அணிய வேண்டும். வெள்ள நீரில் அவசியமின்றி விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும்.

வயல்களில், சேற்று நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகளும், கடல்நீரேரி மீன்பிடித்தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளிகளும் இந்நோய்க்கான தடுப்பு மருந்தை உங்களது பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வெள்ளநீருடன் தொடுகை ஏற்படுத்திக் கொள்பவர்களும் மேற்படி தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக முதல் இரண்டு நாட்களுக்குள்ளேயே தகுந்த மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சிகிச்சைகளை வழங்க முடியாமல் வைத்தியசாலைகள் நெருக்கடியில்!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தகவல்

கொழும்பு, டிசெ. 02

**பேரிடருக்கு மத்தியில் நோயாளர்கள், பாதிக்கப்பட்டோருக்கான சிகிச்சை சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கு சிரமமாக உள்ளதாகவும், நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகள் கடும் நெருக்கடிக்கு முகங் கொடுத்துள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அத்தோடு நுவரெலியா வைத்தியசாலை உள்ளிட்ட அந்த மாவட்டத்தில் உள்ள ஏனைய ஆதார வைத்தியசாலைகளையும் தொடர்புக் கொள்ள முடியவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் வர் மேலும் தெரிவிக்கையில்-

மோசமான காலநிலையின் பின்னர் வானிலை மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது. எனினும் கடந்த சில நாட்களாக நிலவிய கடும் மழை காரணமாக நாடு முழுவதும் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துச் செல்கிறது. களனி ஆற்றின் நீர்மட்டமும் உயர்வடைந்து வருகிறது. பேரிடருக்கு மத்தியில் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகளை வழங்க சிரமமாக உள்ளதுடன், வைத்தியசாலை கட்டமைப்பு கடும் நெருக்கடிகளுக்கு மத்தியில் செல்படுகின்றன.

கண்டி, பதுளை, நுவரெலியா, மாத்தளை, புத்தளம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. விசேடமாக கொழும்பு தேசிய வைத்திய சாலையில் தொடர்ந்து சிகிச்சை சேவைகளை வழங்குவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. பேரிடரின் பின்னர் காயமடைந்தோர், பாதிக்கப்பட்டோர் மற்றும் தொற்று நோய்களுக்கு ஆளாகியவர்களுக்கு சுகாதார சேவை இன்றியமையாததொன்றாகும்.

கண்டி, நாவலப்பிட்டி, கம்பஹா, பேராதனை, பதுளை, நுவரெலியா, கம்பளை, சிலாபம், மகியங்கனை, அனுராதபுரம் ஆகிய பல வைத்தியசாலைகள் நெருக்கடிக்கு மத்தியில் சேவைகளை வழங்கிவருகின்றன. குறிப்பாக மகியங்கனை வைத்தியசாலையில் சிகிச்சை சேவைகள் ஸ்தம்பித்துள்ளன. அத்தியாவசிய சேவைகள் மாத்திரம் வழங்கப்படுவதுடன், அவ்வைத்தியசாலையில் இருந்த நோயாளர்கள் பிபில வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். நுவரெலியா வைத்தியசாலை மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஏனைய ஆதார வைத்தியசாலைகளையும் தொடர்புக் கொள்ள முடியாமல் உள்ளது-என்றார். (அ)

# ஜப்பானிய அரசிடம் உதவி கோரிய சஜித்



கொழும்பு, டிசெ. 02

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஜப்பானிய தூதுவர் அகியோ இசமோட்டாவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

தற்போது இலங்கை எதிர்கொள்ளும் பேரிடர் நிலைமை குறித்து இரு தரப்பினரும் நீண்ட கருத்துக்களை இங்கு பரிமாறிக் கொண்டனர். சிறப்பு மதிப்பீடு மற்றும் நிவாரணக் குழுக்களை ஜப்பான் இலங்கைக்கு அனுப்பி வைத்தமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது தனது நன்றியைத் தெரிவித்தார்.

அதேபோல், கடந்த காலங்களில் இலங்கை இதுபோன்ற பேரழிவுகளை எதிர்கொண்டபோது ஜப்பான், ஒரு நீண்டகால நண்பராக, இலங்கையைத் தனிமைப்படுத்தாது போல், இம்முறையும் இலங்கைக்குத் தேவையான ஆதரவைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

சேதமடைந்த வீதிகளை நவீனமயமாக்கவும், ரயில் போக்குவரத்துப் பாதைகள் கட்டமைப்புகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கும் ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட நிபுணத்து அறிவையும், தொழில்நுட்ப ஒத்துழைப்புகளையும் படிமுறையாக இலங்கைக்குப் பெற்றுத் தருமாறு மேலும் கேட்டுக்கொண்டார்.

பிரதான வைத்தியசாலைகளில் இன்னும் தண்ணீர் பற்றாக்குறை காணப்படுவதாகவும், பேரழிவுக்குப் பிறகு ஏற்படக்கூடிய தொற்றுநோய் சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கு இது தடையாக அமையும் என்றும் சுட்டிக்காட்டினார். எனவே இந்நேரத்தில் இலங்கைக்கு ஜப்பானின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது என்று சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், இந்த நெருக்கடியான நேரத்தில் மனிதாபிமான உதவிகளை துரிதமாக இலங்கைக்குப் பெற்றுத் தருமாறும் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

# அனர்த்த முகாமைத்துவத்தில் இலங்கை அரசாங்கம் தோல்வி

## எதிர்க்கட்சிகள் சபையில் வெளிநடப்பு

கொழும்பு, டிசெ. 02

இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தங்களின் முகாமைத்துவத்தில் அரசாங்கத்தின் செயல்பாடுகள் புறக்கணிக்கப்பட்டதாக விமர்சனம் எழுந்துள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி உட்பட சில எதிர்க்கட்சிகள், அரசாங்கம் அனர்த்த முகாமைத்துவத்தில் தோல்வியடைந்துள்ளது என்று குற்றஞ்சாட்டி, பாராளுமன்றத்தில் இருந்து நேற்று வெளிநடப்பு செய்தன. (அ)

# தடைப்பட்ட பொதுப் போக்குவரத்து சேவைகள் மீளவும் இயல்புநிலைக்கு!

கொழும்பு, டிசெ. 02

நாட்டில் கடந்த வாரம் நிலவிய மோசமான வானிலை மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் முழுமையாக ஸ்தம்பிதமடைந்த பொதுப் போக்குவரத்து சேவைகள் தற்போது இயல்பு நிலைக்கு கொண்டுவரப்படுகின்றன.

கொழும்பு-யாழ்ப்பாணம் பஸ் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், கரையோர மார்க்கம், பிரதான மார்க்கம், புத்தளம் மற்றும் களனிவெளி ஆகிய ரயில் மார்க்கத்தின் ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கமைய, அலுவலக ரயில் சேவைகள் அதிகளவில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

கரையோர ரயில் பாதையில் பாரிய பாதிப்பு ஏற்படாத காரணத்தால் கரையோரத்துக்கான ரயில் சேவை வழமையான நேர அட்டவணைக்கு அமைய முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய மோசமான காலநிலையால் கடந்த வாரம் பொது போக்குவரத்து சேவை முழுமையாக ஸ்தம்பிதமடைந்திருந்தது. (அ)

# நாட்டை வந்தடைந்தது ஜப்பான் மருத்துவ குழு



கொழும்பு, டிசெ. 02

இலங்கை தற்போது எதிர்நோக்கும் அனர்த்த சூழ்நிலையை முன்னிட்டு, நாட்டின் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அவசர மருத்துவ சேவைகளை நேரடியாக ஆராய்வதற்காக ஜப்பான் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பு மருத்துவர்கள் குழு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த குழுவில் ஐந்து ஜப்பானிய சிறப்பு மருத்துவர்கள் மற்றும் ஜப்பான் அரசாங்கத்தின் தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் அடங்குகின்றனர்.

இவர்கள் இலங்கையின் தற்போதைய மருத்துவ வசதிகள், அவசர சிகிச்சை திறன், மருந்து மற்றும் உபகரணங்களின் குறைபாடுகள் உள்ளிட்ட பகுதிகளை மதிப்பாய்வு செய்ய இருக்கின்றனர்.

மேற்கொள்ளப்படும் ஆய்வின் அடிப்படையில், இலங்கைக்கு தேவையான மருத்துவ உதவி, உபகரணங்கள் மற்றும் நிபுணத்துவ ஆதரவை வழங்குவது குறித்த அறிக்கை ஜப்பான் சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும். (அ)

# இலங்கைக்கு 200,000 டொலர்கள் நிதி உதவி வழங்கும் நேபாளம்!

கொழும்பு, டிசெ. 02

வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கான நிவாரணம் மற்றும் மீட்பு முயற்சிகளை ஆதரிப்பதற்காக நேபாள அரசாங்கம் 200,000 அமெரிக்க டொலர் நிதி உதவியை அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் டித்வா சூறாவளியால் ஏற்பட்ட கனமழை, வெள்ளத்தில் குறைந்தது 334 பேர் உயிரிழந்துள்ளனர், 370 பேரை இன்னும் காணவில்லை என்று இலங்கை இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டுகளின் மோசமான வானிலை தொடர்பான பேரிடர்களில் ஒன்றை இலங்கை எதிர்கொள்கிறது.

உதவித் தொகுப்பை அறிவிக்கும் அதே வேளையில், தெற்காசிய தீவு நாடு முழுவதும் பரவலான உயிர் இழப்பு மற்றும் சேதத்தை ஏற்படுத்திய பேரழிவு தரும் வெள்ளம் குறித்து நேபாள வெளிவிவகார அமைச்சு, இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தனது "ஆழ்ந்த வருத்தத்தையும் ஆழ்ந்த அனுதாபங்களையும்" தெரிவித்தது.

"நெருக்கமான இருதரப்பு உறவுகளின் உணர்வின் பேரில், இந்த கடினமான நேரத்தில் நேபாளம் இலங்கையுடன் உறுதியாக நிற்கிறது" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையில் சிக்கிய இந்தியர்களை பாதுகாப்பாக வெளியேற்ற ஏற்பாடுகள்

கொழும்பு, டிசெ. 02

கொழும்பில் இருந்து திருவனந்தபுரத்துக்கு 247 பயணிகளுடன் ஒரு விமானமும், டில்லிக்கு 76 பயணிகளுடன் ஒரு விமானமும் புறப்பட்டுள்ளன.

அதேபோல் வணிக விமானங்கள் மூலம் சிக்கித் தவிக்கும் பயணிகளை மேலும் வெளியேற்றும் பணிகளும் நடந்து வருகின்றன.

இந்திய தூதரகம் கொழும்பில் சிக்கித் தவிக்கும் இந்திய பயணிகளுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறது. அவர்கள் வீடு திரும்புவதற்கான விரைவான பயணத்தை எளிதாக்குகிறது.

தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில்,

சிக்கித் தவிக்கும் எந்தவொரு இந்திய பயணியும் அவசர உதவி மைய எண், 94 773727832 ஐத் தொடர்பு கொள்ளலாம் அல்லது கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தற்போது செயல்படும் விமான நிறுவன அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது. (அ)

# பெருக்கெடுத்தது மகாவலி கங்கை!

## நூற்றுக்கணக்கான மக்கள் இடம்பெயர்வு



கொழும்பு, டிசெ. 02

மகாவலி கங்கை பெருக்கெடுத்ததால் 140 இற்கும் மேற் பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

மகாவலி கங்கையில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப்பெருக்கின் காரணமாக, மூன்று கிராமங்களுக்குள் வெள்ள நீர் புகுந்து சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

கந்தளாய் சூரியபுர பகுதிக்குள் மகாவலி கங்கை பெருக்கெடுத்ததால், அப்பகுதி கிராமங்கள் தற்போது நீரில் மூழ்கியுள்ளன.

சூரியபுர, சமகிபுர, சமணலப்பாலம் உள்ளிட்ட கிராமங்கள் முழுவதுமாக வெள்ளநீரில் மூழ்கி நிலைமை கடுமையாக உள்ளது.

வெள்ளநீர் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரம், குடிதண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் தற்காலிகமாக துண்டிக்கப்பட்டுள்ளன.

வெள்ளநீர் அதிகரித்ததால் அப்பகுதிகளுக்கான போக்குவரத்து மார்க்கங்களும் முற்றிலும் முடங்கியுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட அவசர மீட்பு நடவடிக்கைகளின் போது 140 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீட்கப்பட்டு, மகாவலி மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு, குடிதண்ணீர், உலர் உணவுப் பொருட்கள், மருத்துவ உதவி உள்ளிட்ட தேவையான நிவாரண சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.